செ.வெ.எண்:17 நாள்: 16.06.2020

## பெரம்பலூர் மாவட்டம்

**பெரம்பலூர் மாவட்டத்தில் 1 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய கட்டிடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.**

அதன் விபரம் பின்வருமாறு:

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அதடினடிப்படையில் துறைமங்கலத்தில் கியூபிராஞ்ச் (குற்ற புலனாய்வுத்துறை)க்கு புதிதாக கட்டப்பட்ட அலுவலக கட்டிடம் மற்றும் பெரம்பலூர் ஆலத்தூர் வட்டத்தில் சார்நிலை கருவூல அலுவலக கட்டிடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் இன்று (16.06.2020) சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் இக்கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி, கட்டிடத்தை பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கியூபிராஞ்ச் (குற்ற புலனாய்வுத்துறை)க்கு கட்டப்பட்ட கட்டிடம் தரைதளம் 152.27 ச.மீட்டரில் போர்டிகோ, கணிணி அறை, ஆய்வாளர் அறை, உதவி ஆய்வாளர் அறை, எழுத்தர் அறை, பதிவறை மற்றும் கைதி அறை, கழிவறைகளுடனும் , முதல் தளம் 132.45 ச.மீட்டரில் துணைக்காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், கூட்ட அரங்கு, தகவல் அறைகளுடன் மொத்தம் 309.77 ச.மீட்டரில் ரூ.89.19 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டத்தில் 292.50 ச.மீட்டரில் கட்டப்பட்டுள்ள சார்நிலை கருவூல அலுவலகமானது தரை தளம் மற்றும் முதல் தளத்துடன் ரூ.72.05 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. இந்நிகழ்வுகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.நிஷாபார்த்திபன் இ.கா.ப., திருச்சி சரக கியூ பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு சிவசங்கர், வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.சக்திவேல், மாவட்ட கருவூல அலுவலர் திருமதி.பார்வதி, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.கென்னடி,நகராட்சி ஆணையர் திரு.குமரிமன்னன், செயற்பொறியாளர் திரு.மணிவண்ணன், உதவி பொறியாளர்கள் திரு.தேவேந்திரன், திரு.தனவேல் வட்டாட்சியர்கள் திரு.பாரதிவளவன், திரு.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**